மேகலை வரிசை 2.

ஃவிரஞ்சு அறிஞர் ரூசோவின்

# சமூக ஒப்பந்தம்

★

பதிப்பாசிரியர் :

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, M.A., L.T.,

★

மேகலை

வெங்கடாசல முதலி தெரு,

: : சென்னை 7

W

NSI

163079

பதிப்புரிமை தமிழாக்க
ஆசிரியருக்கே.

விலை அணா 4

சக்தி அச்சகம், 174. நைனியப்ப நாய்க்கன் தெரு. பி. டி. சென்னை

# முன்னுரை

நூல்: உலகையே மாற்றியமைக்க உதவிய ஒருநூல் எது என்று கேட்டால் 'சமூக ஒப்பந்தம்' என்று தயங்காமல் கூறலாம். அத்துடன் அத்தகைய நூல்களுள்ளும் கார்ல் மார்க்ஸின் முதலீடுபோல் அது ஒரு சில அறிஞரின் அறிவுக் கருவூலமாயில்லை. அது மிகப் பேரளவில் பொது மக்களால் வாசிக்கபபட்டு, மக்களுலகிலே புயல்களை எழுப்பிய நூல். அமெரிக்கப் புரட்சிக்குத் தூண்டுதல் தந்து, ஃவிரஞ்சுப் புரட்சியை எழுப்பி, உலகப் புரட்சிக்கே அது மூலகாரணமாயிருந்தது. பிளேட்டோவின் 'குடியரசு' அரிஸ்டாட்டிலின் 'அரசியல்,' மாக்கியவெலியின் 'இளவரசன்,' ஹூக்கரின் 'சமய ஆட்சிமுறை,' ஹாப்ஸின் 'அரசியல் சமூகம்,' 'லெவியாதன்,' லோக்கின் 'சமூக அரசியல்' ஆகியவற்றின் வழி வந்த அரசியல் பெருநூல்களுள் அது ஒன்று.

'சமூக ஒப்பந்தம்' 'அல்லது அரசியல் உரிமைமுறையின் தத்துவங்கள்', என்பது நூலின் முழுப்பெயர். 1756-ல் தொடங்கி முற்றுப்பெருது விடப்பட்ட 'அரசியல் நிலையங்கள்' என்ற பெருநூலின் ஒரு முழுப் பெரும் பகுதி அது.

ஆசிரியர்: 'ஒரு சுதந்தர நாட்டில் பிறந்து, அதன் ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமைப் பேறு பெற்றவன்,' என்று சமூக ஒப்பந்தத்தில் அதன் ஆசிரியர் ஜீன் ஜாக்ஸ் ரூசோ, தம் தாயக அரசுபற்றிப் பெருமைப் படுகிருர். அத்தாயக அரசு ஜெனிவாவே. அவர் அதில் 1712-ல் பிறந்தார். 'கலைகளும் இயல்களும் மக்கள் சமூக வாழ்வை மாற்றி யமைந்தவகை' 'சமத்துவம் கெட்டழிந்த வரலாறு' என்ற கட்டுரைகளும் கல்வி முறைபற்றிய கருத்துரையான 'எமிலியும் 'சமூக ஒப்பந்த'மும்,' 'உளளக்கருத்துகள் (Confessions) என்பதும் அவர் சிறந்த நூல்கள்

'சமூக ஒப்பந்தத்'தில் ஜெனிவா அரசியலைப் புகழ்ந்திருப்பதனால், அந் நாட்டரசியல் அந் நூலை நன்கு வரவேற்கும் என்று அவர் நம்பியிருந்தார். ஆனால் அதன் மக்கள் சமத்துவக் கோட்டை அவர் கண்டித்திருந்ததனால், அந் நூல் அரசியலாரால் எரிக்கப்பட்டது. அவரும் அந்நாட்டின் குடியுரிமையை 1763-ல் தூக்கி எறிந்தார். 1778-ல் அவர் இயற்கை யெய்தினார்.

ஃவிரஞ்சுப் புரட்சிப் புயலில் ரூசோ உயிருடன் இல்லாவிட்டாலும், அவர் புகழும் அவர் நூலின் புகழும் அவருக்குப் பின் மக்கள் உணர்ச்சி வானத்தின்மீது பறந்தன. மக்கள் ஆவேசத்தில் நாட்டுப் புறத்தில் இருந்த அவர் கல்லறை சென்று அவரை வணங்கி, அவர் உடலை மீண்டும் எடுத்து நாலுடன் ஊர்வலமாகக் கொண்டு சென்று, அரசியல் ஆடம்பரத்துடன் மீண்டும் அடக்கம் செய்தனர்.

'சமூக ஒப்பந்த'த்தின் புகழ் பல நாட்டின் அரசியலாரையே கவர்ந்தது. கார்ஸிகா, போலந்து ஆகிய இரு நாடுகளுக்கும் அரசியலமைப்புச் சட்டம் வகுத்துத் தர ரூசோ வேண்டிக்கொள்ளப் பட்டிருந்தார். அவர் அவ்வாறே செய்தும், இருநாடுகளும் விரைவில் சுதந்தரமிழந்து விட்டதால், அவற்றைப் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது.

தமிழாக்க ஆசிரியர்.

# ஃவிரஞ்சு அறிஞர் ரூசோவின் சமூக ஒப்பந்தம்

## 1. சமூக உரிமை

அரசியல் சமூக வாழ்வின் அமைதி முறைகளை ஆராய்ந்து வழிவகுக்க ஒருவன் மன்னனாகவோ, மன்னுரிமைச் சட்டங்கள் வகுப்பவனாகவோ இருக்கவேண்டியதில்லை. அவ்வாறு இருந்தால், அவன் அவற்றுக்கு வழிகாட்டமாட்டான்; அவற்றைச் செயலாற்றுவான். தவிர, ஒரு சுதந்தர நாட்டில் பிறந்து, அதன் ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை உடையவன் என்ற முறையில், ஆளும்வகைபற்றி அவர்களுக்கு என் கருத்தைத் தெளிவு படுத்தும் கடமை எனக்கு உண்டு. இந்நூல் அதை ஆற்றுகிறது.

மனிதர் பிறப்பது சுதந்தரமாகவே. ஆனால் எங்கும் வாழ்வில் அவர்கள் கட்டுண்டு கிடக்கின்றனர். பிறப்புக்கும் வாழ்வுக்கும் இடையே இந்த மாறுபாடு எப்படி வந்தது?

அடிமைகளின் தலைவர்கள் என்று சிலர் தம்மைக் குறித்துக் கொள்வதுண்டு. அவர்களும் அடிமைகளே.

அரசியலாட்சியும் சமூக ஆட்சியும் மனிதருக்காக அமைந்தவையே. மனிதர் அரசியல் ஆட்சிக்காகவும் சமூகத்துக்காவும் அமைந்தவர் அல்லர்.

சமூகம் ஒரு பெரிய குடும்பம்; குடும்பம் ஒரு சிறிய சமூகம். குடும்பத்தில் பிள்ளைகள் நலத்துக்காகத் தந்தை அவர்கள் இயற்கை யுரிமையைத் தாம் கைக்கொண்டு செயலாற்றுகிறார். பிள்ளைகள் தேவைதீர்ந்த கணமே, தந்தையும் பிள்ளைகளும் ஒரே நிலையடைந்து 'மக்கள்'

ஆகின்றனர். அதற்குப் பின்னும் தந்தை உரிமையாட்சி நீடிக்கலாம். ஆனால் இது முந்திய இயற்கையுரிமையன்று.

சமூகத்திலும் மக்கள் நலத்துக்காகவே சமூகத் தலைவரும் ஆட்சியாளரும் அவர்கள் இயற்கை உரிமைகளைக் கையாளுகின்றனர். தத்தம் நலங்கருதியே, ஆக்கம் கருதியே, மக்கள் தம் இயற்கை உரிமையைப் பொது உரிமையாகச் சமூகப்பொதுமைக்கு விட்டுக்கொடுக்கின்றனர் அப் பொதுவுரிமையில் அவர்கள் பங்கு, அவர்கள் குடியுரிமை. அப் பொதுவுரிமையைக் காப்பதில் அவர்கள் பங்கு, அவர்கள் கடமை. தலைவர் கடமையை இயக்கும் முழுபொறுப்பும் ஏற்று, அதற்காகவே முழு உரிமையையும் கையாளுகின்றனர்.

உரிமை, வலிமையால் ஏற்படுவது என்று சிலர் கருதுகின்றனர். இது தவறு. வலிமையால் ஏற்படும் ஆதிக்கம் வலிமையாலேயே என்றும் காக்கப்படவேண்டும். வலிமையால் அது போக்கப்படவும் முடியும். வலிமை இருக்குமளவே அது இருக்கும். ஆகவே வலிமையால் ஏற்படும் ஆதிக்கம் ஆதிக்கம் மட்டுமே. உரிமை ஆட்சி ஆகாது. வலிமைக்கு அடங்கி நடப்பது அடிமை, அச்சம் கோழைமை, அறியாமை ஆகலாம்: கடமை ஆகாது.

'ஆளப்படுபவர் நலனுக்காக ஆட்சி' என்பதை அறிஞர் குரோட்டியஸ் மறுக்கிறார். அடிமை முறையைச் சுட்டிக்காட்டி ஆட்சியுரிமை ஆட்சியால் ஏற்படுவதே என்கிறார். ஆனால் மனித இனம் பேரரசர் காலிகுலா கருதியது போல், ஒரு சில மனிதக் கோனார்களுக்குச் சொந்தமான மனித ஆட்டுமந்தை அல்ல. ஆளப்படுபவரைப்போல, ஆள்பவரும் மனிதரே.

"சிலர் சுதந்தர உரிமை பெறப் பிறக்கிறார்கள். சிலர் அடிமை நிலைபெறவே பிறக்கிறார்கள். அடிமை நிலையை அவர்கள் விரும்பி ஏற்பதையும் காண்கிறோம்" என்கிறார் அரிஸ்டாட்டில். அடிமையான ஒரு தந்தையின் அடிமைத் தனத்தை அவர் பிள்ளை இயற்கையாக ஏற்பதையே இங்கே அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். ஆனால் முதல் அடிமைத்தனம் பிறப்பினால் ஏற்பட்டிருக்க முடியாது.

வலிமை காரணமாக அல்லது அச்சம் காரணமாகவே ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதை அரிஸ்டாட்டில் கவனிக்கவில்லை. அதே சூழ்நிலை இருக்கும்வரை அது தலைமுறை தலைமுறையாக நீடித்து இருக்கலாம். ஆனால் அடிமையின் பணிவு எப்போதும் அச்சம், கோழைமை, மடமை ஆகியவற்றுள் ஒன்றின் சின்னமாகவே இயலக்கூடும். தன் நலங்கள் பற்றிய அறிவு உடைய இணக்கம் அதாவது கடமை ஆகாது.

மனிதரிடையே வேறுபாடுகள் உண்டு. இயற்கை வேறுபாடுகள் கூட உண்டு. ஆனால் உயர்வுதாழ்வு கிடையாது. சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சில வேறுபாடுகள் உயர்வுதர்ழ்வு உண்டுபண்ணலாம். ஆனால் இது நிலையானதன்று. வலிமையுடையவர் ஆள்வர் சிலகாலம். செல்வமுடையவர், அறிவுடையவர், அன்புடையவர் என வேறு பல திறத்தவர் வேறு பல காலம் ஆள்வர். ஆகவே மொத்தத்தில் மனிதரிடையே வேறுபாடுகள் உண்டானாலும், உரிமையில் எல்லாரும் சரி நிகரே ஆவர்.

போர் வெற்றி அடிமைத்தனத்துக்கும் காரணம், ஆட்சி உரிமைக்கும் காரணம் என்று அறிஞர் ஹாப்ஸ், குரோட்டியஸ் அகியோர் கூறுகிறார்கள். போர் வெற்றி அடிமைத்தனத்துக்குக் காரணமாகலாம். ஆனால் அந்த வெற்றியின் வலிமை இருக்கும் அளவெ அடிமைத்தனம் நிலவும். அட்சியுரிமையோ அல்லது வேறு எந்த உரிமையோ போர் வெற்றியினால் ஏற்பட முடியாது. போரில் நாட்டு மக்களுக்கு நாட்டு மக்கள் பகைவரல்லர், மன்னருக்கு மன்னர் தான் பகைவர். தோற்ற மன்னர் நாடிழக்கலாம். அதனால் வென்றவர்க்குப்புது உரிமை வந்துவிடாது. ஏனெனில் உரிமை எப்போதும் மக்கள் விருப்பத்தைப் பொறுத்தது,

பேரரில் கொல்லும் உரிமையால், கொல்லாதுவிடப்பட்டவர் உயிர்மீது வெற்றியாளருக்கு உரிமை ஏற்படுகிறது என்று சிலர் கூறுகின்றனர். கொல்லும் வலிமை அல்லது வாய்ப்பு உடையவராயிருப்பது கொல்லும் உரிமை ஆகாது, மேலும் கொல்லாது விடுதல் என்பது

அச்சுறுத்தலேயாகும். அச்சம் அடிமைத்தளம் உண்டு பண்ணலாம். ஆனல் உரிமைதராது. அடிமைகள் உண்மையில் உரிமை மறுக்கப்பட்டவரே, உரிமை இழந்தவர் அல்லர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆட்சி உரிமையின் ஒரே அடிப்படை, ஆளப்படுவர் இணககம். இந்த இணக்கம் அவர்கள் முன்னைய விருப்பத்தின் மரபு. அவ் விருப்பத்தைச் சமூகமே அறிய விரும்பும் போதுதான் பெரும்பாலார் கருத்தறிவதற்கான மொழியுரிமை தேவைப்பட்டது. சிறுபான்மையினர் இதை ஏற்பதிலிருந்து இன்றைய இணக்கம் முன்னைய ஓர் ஒப்பந்தத்தின் மரபு என்று காணலாம். அவ்வொப்பந்தம் ஓர் இயற்கை ஒப்பந்தம்—ஓர் எழுதா ஒப்பந்தம்—ஒரு மரபு ஒப்பந்தம். ஏனெனில் அடிமையின் பிள்ளை இயல்பாய் அதைத் தற்காலிகமாக ஏற்பதுபோல, ஒப்பந்தம் செய்தவன் பிள்ளையும், பிள்ளையின் பிள்ளையும், அதை இயல்பாக மரபாய் ஏற்கின்றனர். அது எழுதா ஒப்பந்தம். ஏனெனில் எழுத்து வகுக்கப்படுமுன், மொழிகள் தோன்று முன்பே அது வழங்கியது. அது இயற்கை ஒப்பந்தம். ஏனெனில் இயற்கைத் தேவை அடிப்படையில், இயற்கை உணர்ச்சி அடிப்படையில் அது தோன்றி வளர்ந்தது.

இயற்கை வாழ்வு தனி வாழ்வு. மனிதன் கூட்டுறவு வாழ்வு வாழும் உயிரினங்களைச் சேர்ந்தவன். தொடக்கத்தில் கூட்டு வாழ்விலும் அவன் தனித்தனி உரிமையும் தனித்தனி பாதுகாப்புப்பொறுப்பும் உடையவனகவே இருந்திருக்கவேண்டும். இதில் எல்லா மனிதருக்கும் சரிசம நிலையே இருந்தது. அவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவியிருப்பர். திறமை அல்லது வல்லமையுடையவர் துணை விரும்பப்பட்டது. அதே சமயம் துணை எத்தகையவர் தனித்திறத்தையும் உயர்த்திற்று. முழுக் கட்டைகள் உத்தரமானல், சிறிய கட்டைகள் விறகாகவும், சிறு துரும்புகள் பல்லுக் குச்சியாகவும் பயன்படலாம் அல்லவா?

கூட்டுறவில் உரிமைகள் வளரவில்லை; ஆனல் பாதுகாப்புவலு வளர்ந்தது. தனி மனிதன் ஆற்றல் சிறிது. அவனைத் தாக்கிய இடையூறுகள் மிகப்பெரிது. அதே சம

யம் இடையூறுகள் அவ்வப்போதுதான் நேர்ந்தன. எனவே ஒவ்வொருவரின் இடையூற்றிலும் அனைவர் மொத்தப் பாதுகாப்பு வலுவும் பயன்பட்டது. கூட்டு வலுவின் இப்பயன் கண்டு தனி மனிதர் தாமாகத் தம் உரிமைகளைக் கூட்டுறவின் கையில் ஒப்படைத்து அதைப் பொதுவுரிமை ஆக்கினர். அதற்கும் அவர்களே உறுப்பினர் என்ற முறையில் உரியவர்களாதலால், அவர்கள் பழய இயற்கை உரிமை இப்போது புதிய குடியுரிமை ஆயிற்று. குடியுரிமையும் குடியும் பேணும் பொறுப்பு கடமையாயிற்று. இக்கடமைத் தளை சமூகத்தின் பாதுகாப்பு வலுவை வளர்த்தது.

ஆகவே சமூக ஒப்பந்தத்தின் மூலம், ஒவ்வொரு தனி உறுப்பினன் உரிமைகளையும் உடைமைகளையும் பேண, அவன் எல்லா உறுப்பினர் வலுவையும் ஒருங்கே பயன் படுத்துகிறான். ஒவ்வொருவனும் முழு முதல் சமூகத்துக்கு உரிமையை விட்டுக்கொடுத்து அதைத் திரும்பக் குடியுரிமையாகப் பெறுவதன மூலம எல்லாருடனும் சரிசம நிலையிலிருந்து கொண்டே, தன் சுதந்திர உரிமையை விடாமலே, எல்லார் உதவியும் பெறுகிறான். ஆனால் அதே சமயம் அவன் எல்லாருக்கும் உதவுகிறான். ஒரே பொது உரிமைக்குத் தானும் மனமாரப் பணிந்து, பிறரையும் மனமாரப் பணிய வைப்பதனால், அவன் தனக்குத் தானே பணிபவன் ஆகிறான்.

இங்கே முழுமுதலினிடம் உறுப்பினர் தம் இயற்கை உரிமை அனைத்தையும் கொடுத்து விடுகின்றனர். அது மட்டுமல்ல. தம் இயற்கை உடைமை அனைத்தையும் கொடுத்து விடுகின்றனர். ஆனால் கொடுத்த எதையும் அவர்கள் இழக்கவில்லை. இயற்கை உடைமையைச் சமூக உடைமையாக மீட்டும் பெறுகின்றனர். சமூகக் கூட்டுறவில் சேர்ந்ததனால் அவர்களுக்கு உண்மையில் நட்டம் மிகுதி இல்லை. ஆயினும் ஆதாயம் எல்லையற்றது. ஏனெனில் தன் ஒரு தனிமனித உரிமைக்கும் உடைமைக்கும் பதிலாக அவர்களுக்கு அத்தனை மனிதர் உதவியும் பாதுகாப்பும் நிலையாகக் கிடைக்கிறது. ஒரு துளி தன் ஆற்றலைக்

கட்டிலுக்குக் கொடுத்தது. கடல் தன் ஆற்றலை அத்துளிக்குத் திரும்பவும் கொடுத்தது. துளியை யாரும் விழுங்கிவிடலாம். கடலை எவரும் விழுங்க முடியாது. கடல் எல்லாரையும் யாவரையும் விழுங்கவல்லது.

கூட்டுறவின் முழுமுதல் இப்போது சமூகம் ஆயிற்று.

இயற்கை வாழ்வில் வலிமை வாழ்வின் ஒரே பாதுகாப்பு. மனிதன் செயல்கள் அவன் பசி, வேட்கை முதலிய உடலின் உணர்ச்சிகளின் பயன் மட்டுமே. சமூக வாழ்வில் உரிமை என்ற புதுப் பாதுகாப்பு எழுகிறது. செயல்களைக் கடமை, நேர்மை ஆகிய உயர்வகை அறிவுணர்ச்சிகள் இயக்குகின்றன. மனிதன் அறிவு செயலாற்றத் தொடங்குகிறது. அறிவு ஒரு சமூகப் பண்பு. ஒரு தனி மனிதன் அனுபவம் அடுத்த தனி மனிதனுக்கும், ஒரு தலைமுறை அனுபவம் அடுத்த தலைமுறைக்கும் என்றிப்படி அறிவாற்றல் சமூக நலனைக் குறிக்கோளாகக் கொண்டு வளர்கிறது. இவ்வறிவின் கருவியாக மொழியும், எழுத்தும், இலக்கியமும், நூலும், நூல் துறைகளும் வளாகின்றன.

கூட்டுறவின் உரிமை, உறுப்பினர் அனைவரின் இயற்கை உரிமைகளின் தொகுதி. சமூக உறுப்பினர் அதைச் சரிசமமாகப் பங்கிட்டு ஒரு பகுதி உரிமையைத் தம் சமூக உரிமையாகக் கொள்கின்றனர். தனித்தனி உரிமையின் இச் சரிசம நிலையையே நாம் நேர்மை என்கிறோம். அதைப் பேணும் மூறைகளையே ஒழுங்கு, சட்டம் என்கிறோம்.

முழு முதல் உரிமை என்றும் கூடவோ குறையவோ மாறவோ செய்ய முடியாது. ஏனெனில் அது கூட்டுறவின் எல்லாத் தனி மனிதரின் உரிமைகளின கூட்டு முதல் மட்டுமே. அது தனி மனிதர் இயல்பாக, தம்மிச்சையாக அளித்ததாதலால், அவ்வுரிமை பொதுவிலிருந்து என்றும் எடுபடவோ குறையவோ மாட்டாது. ஆகவே முழு முதல் உரிமைக்கு எந்த வரையறையும் கட்டுப்பாடும் கிடையாது, அது முழுநிறை உரிமை (Sovereignty) ஆகும்.

தனி மனிதன் விருப்பம் அவன் குடி உரிமை எல்லைக்குள் நிற்பதல்ல. ஏனென்றால் குடி உரிமை பொதுவிருப்ப அடிப்படையிலமைந்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. இப் பொதுவிருப்பத்துக்கு மாறாக நடக்கத் தனி மனிதன் முயலும்போதெல்லாம், பொது விருப்பம் அதாவது சமூக விருப்பம் அவனைத் தடுத்துத் தண்டிக்க உரிமை பெற்றிருக்கிறது. இது சமூக ஒப்பந்தத்தின் ஒரு கூறு. ஆனால் தனிமனிதன் விருப்பம் தனி மனிதர்கள் விருப்பமாகப் பரவிப் பொது விருப்பம் ஆகவே வழியுண்டு. அப்போது அது புதிய சமூக உரிமை ஆகிவிடும். எனவே சமூக ஒப்பந்தத்தால் முழு முதல் உரிமையும் கட்டுப்பாடற்று வலுவடைந்து வளர இடம் இருக்கிறது. தனி மனிதர் உரிமையும் கட்டுப்பாடற்று வளர இடமிருக்கிறது. முழுமுதலுரிமையும் தனி மனிதனுரிமையும் காதலன்—காதலி உரிமை போல, ஒன்றை ஒன்று பொதிந்து, ஒன்றை ஒன்று வளர்க்கும் திறம் உடையவை.

தனி மனிதன் இயற்கை உடைமை சமூகத்தில் பொது உடைமை, தனி உடைமை என்ற இரு வடிவம் பெறுகிறது. வீடுகள், தோட்ட வயல்கள் தனி உடைமை. தெருக்கள், ஊர் மதில்கள், பொது நிலையங்கள் பொதுவுடைமை.

இயற்கை உடைமை என்பது என்ன? அதாவது உடைமை என்ற தத்துவம் எப்படி தோன்றிற்று.

ஒரு பொருள் ஒருவன் உடைமையாகுமுன் அது பற்றிய மூன்று செய்திகள் கவனத்துக் குரியவை ஆகின்றன.

(1) அவ்வுடைமை முன் எவர் உரிமையும் ஆகியிருக்கக்கூடாது.

(2) அது உடையவன் உழைப்பின் பயனாய் உண்டாகி, அவன் உழைப்பின் பயனாகவே பேணப்படுவதாக இருக்கவேண்டும்.

(3) அது அவன் தேவைக்கு மேற்பட்டதாகவோ, அவனால் பேணிக் காக்கும் எல்லைக்கு மேற்பட்டதாகவோ இருக்கக் கூடாது

நாகரிக சமூகத்தில் இம்மூன்றும் எப்போதும் செயலாற்றுவதில்லை. ஆனால் இப்பண்புகள் உள்ளார்ந்த கூறுகளாய் எப்போதும் நிலவித் தீரும். நூனெஸ் பால்பாவ் பஸிபிக் கடலையும் தென் அமெரிக்காவையும் முதல் முதல் கண்ட வெள்ளையர் ஆவர். அக்கடலையும் அக்கண்டத்தையும் அவர் தம் மன்னர் போர்ச்சுகீசு அரசருக்கே உரிமையாக்கினர். ஆனால் அக்கடலை அந்நாடு ஆள முடியவில்லை. அந்தக் கண்டத்திலோ முன் குடியிருந்த மக்களை அகற்றமுடியாது போயிற்று. அத்துடன் பிற வல்லரசுகள் நுழைவையோ, வெள்ளையர் புதிய குடியேற்றங்களையோ யாரும் தடுக்க முடியவில்லை.

தேவைக்கு மேற்பட்ட உடைமைகளை ஒருவன் வைத்திருப்பது உரிமையாலல்ல; வலிமை, அதனடிப்படையாகச் சமூகத்தில் ஏற்பட்ட இயற்கைக் கோளாறுகள் ஆகியவற்றின் பயனாலேயே ஆகும்.

தேவைக்கு மேல் உடைமை, உழையாத உடைமை ஆகிய இரண்டும் இன்று பலருக்கு உண்டு. ஆனால் இது நாகரிக சமூகத்தின் பாதுகாப்புத் தரும் விளைவு. இது இயற்கையுரிமை அல்ல. இது சமூகத்தின் மொத்த வலுவைக் குறைக்கும். சமூகப் பாதுகாப்புத் தளர்ந்து இயற்கை நிலை ஏற்பட்டவுடன், உரிமைகள் பழைய இயற்கை நிலையிலேயே மீண்டும் அமையும். சமூகத்தில் இத்தகைய கோளாறுகள் குலைவுற்றுத் தகர்ந்து, அதன் பயனாக இயற்கை உரிமையின் அடிப்படையில் திரும்பவும் திருந்திய சமூகம் அமையும் நிலையையே நாம் புரட்சி என்கிறோம்.

இயற்கை உரிமை நிலைக்குச் சமூக உரிமை நிலை எவ்வளவு அருகாமையிலிருக்கிறதோ, அந்த அளவுக்குச் சமூக அமைப்பு வலுவுடையது.

## 2. முழுமுதலுரிமையும் சட்ட திட்டங்களும்

சமூகத்தின் முழுமுதலுரிமை அதன் உறுப்பினரின் மொத்த உரிமையே—பெரும்பான்மை உரிமைகூட அல்ல! பெரும்பான்மை அதன் ஏகதேச நிலை மட்டுமே. அதனை மனமார விரும்பும் உறுப்பினரே, அதனை மனமாரப் பின்பற்றி ஒத்துழைப்பர். மனமார விரும்பாதவரும் இணங்கியாக வேண்டும். இது ஒப்பந்தத்தில் ஏற்பட்ட கூறு. ஆனால் மனமில்லாத இந்த இணக்கம் தற்காலிகமானதாக, மிகுதி வளராததாக இருந்தாக வேண்டும். ஏனெனில் அது நீடிக்குந்தோறும், பெருகுந்தோறும் சமூகக் கட்டுப்பாடு தளரும். சமூக வலுக்குறையும். இன்னொரு வகையாகச் சொல்வதானால், சமூகத்தில் மிகப் பெரும்பாலாரும்—கூடுமானால் அனைவரும்—மனமார விரும்பி ஏற்கும் பண்புகளே சமூகத்தை வலுப்படுத்தும் அடிப்படைப் பண்புகள் ஆகும்.

மனமார விரும்பி ஒத்துழைத்தல் சமூக உரிமையின் உயர் நிலைப் பண்பு. மனமார விரும்பாமல் இணங்குதல் அதன் நடுத்தரப் பண்பு. வெறுத்துக் கீழ்ப்படிதல் இருக்கக்கூடாத இழிநிலைப் பண்பு. மூன்றாவது பண்பு மிகுந்தோறும் சமூகம் அழிவை நோக்கிச் செல்லும். பலர் ஆதிக்கம், சிலர் ஆதிக்கம், ஒருவர் ஆதிக்கம் ஆகிய மூன்றும் இக்கீழ்ப்படிதற் பண்பைப் பெருக்கும் படிகள்; அவை சமூகத்தின் உயிர்ப் பண்பைக் குலைப்பவை. ஆகவே சமூகத்தின் முழுமுதல் உரிமை சமூகத்தில் ஒருவரிடமோ, சிலரிடமோ, பலரிடமோ கூடத் தங்கக் கூடாது. முழு முதல் அதாவது மொத்தச் சமூகத்தின் உரிமையாகவே இருந்து தீரவேண்டும்.

இவ்வுரிமை பங்கிட்டுத் தரத்தக்கதுமல்ல. பகிரக் கூடியதுமல்ல. ஆயிரத்தில் ஒன்று குறைந்தால், ஆயிரமல்ல. அதுபோல, முழு முதலில் ஒரு சிறிது குறைந்தால் கூட, அது முழு முதலுரிமையல்ல.

உயிருள்ள உடலைக் கூறிட்டுச் சேர்த்தால் உடலாகும். உயிருள்ள உடலாகாது. முழு முதல் உரிமை உடலின் வேறான உயிர் போன்ற உயிர்ப் பண்பு ஆகும்.

முழு முதல் உரிமை சர்வ வல்லமை உடையது. ஏனெனில் சமூக உறுப்பினர் சமூகத்துக்குத் தப்ப முடியாது. ஆனால் அது சர்வ நீதி உடையது. ஏனெனில் எல்லார் நலங்களையும் கலந்து உருவான எல்லாரது பொது நலமே அது. சமூக எல்லைக்குள் அது எல்லாம் அறிவது. ஏனெனில் எல்லார் அனுபவ அறிவும் அதை ஆக்குகிறது. அது முழு நிறை அன்புடையது. ஏனெனில் அது எல்லார் தன்னல ஆர்வத்தினையும் உட்கொண்டது. [இயற்கைச் சமயத்தில் இப்பண்புகள் உடையதாகவே தெய்வம் அல்லது கடவுள் கற்பனை செய்யப்பட்டுள்ளது].

முழு முதல் உரிமை வலுக் குறைந்தால், அது சமூகத்தின் பிளவு, உயர்வு தாழ்வு வேறுபாடு ஆகியவற்றின் பயன் ஆகும். சர்வ நீதி பிழைத்தல், சரிசம உரிமை பிழைப்பதாலும்; எல்லாம் அறியும் நிலையில் குறைதல், எல்லாரும் அறிந்தாராயும் வாய்ப்பு இல்லாமையாலும், முழு நிறை அன்பில்லாமையாலும், எல்லார் ஆர்வத்தையும் சரி சமமாக நிழற்படுத்தாமையாலுமே ஏற்படும். இவை சமூகத்தின் கோளாறுகள் ஆகும்.

தனி மனிதன் ஆற்றலுக்கு ஒரு எல்லை உண்டு: ஆனால் இதை வளர்க்கவே அவன் முழு முதலில் இணைந்தான். இணைந்தபின் முழு முதலின் ஆற்றலுக்கும் ஒரு எல்லை உண்டு. ஆனால் இதை முழு முதல் வளர்க்க முடியும். முழு முதலின் உரிமையே தனி மனிதன் கடமை. தனி மனிதன் உரிமையையே முழு முதல் அவன் கடமை ஆக்க முடியுமானால், தனி மனிதன் ஆற்றலும் வளரும். முழு முதலின் ஆற்றலும் வளரும். குடியாட்சியை அணுகுந்தோறும் இந்த ஆற்றல் வளருகிறது. பொது உடைமையை அணுகுந்தோறும் அது இன்னும் வளர்கிறது. அன்பாட்சியை அணுகுந்தோறும் அது பின்னும் வளரும்.

தனி மனிதன் உரிமை மீது முழுமுதல் செலுத்தும் ஆட்சி அதைக் குறைப்பது போலத் தோற்றுகிறது. ஆனால் இது அதன் நோக்கம் அன்று. அவ்வாட்சியில் மிகக் கொடிய தீம்பு தனிமனிதன் உயிரை வாங்கும்

உரிமையே. ஆனால் இது கூட, தனிமனிதன் உயிரைப் பாதுகாக்கும் ஆர்வம் காரணமாகவே ஏற்பட்டது. புலியிடமிருந்து பிள்ளையை மீட்கத் தந்தை தன் உயிரை இடருக்கு உள்ளாக்கவில்லையா? இதுபோல, பல உயிரைப் பாதுகாக்க வேறு வழி காணமல், முழுமுதல் தரும் இடர்பாதுகாப்பு முறையே தூக்குத் தண்டனை! இப்பாதுகாப்புக்கு வேறு வழி கண்டால், தூக்குத் தேவைபடாது. தனிமனிதன் உரிமை சமூக அடிப்படையாகும் எல்லையில், எந்தத் தண்டனையுமே தேவைப் படாது. தண்டனையாகிய நஞ்சு மருந்து ஆகி, மருந்து உணவாய், உணவு தின்பண்டமாய் விடும். அதன் பின் தண்டனையின் படிகள் மறைந்துவிடும். துன்பமே இன்பமாய்விடும்.

உரிமையின் பாதுகாப்பு கடமை. கடமையின் பாதுகாப்பு சட்டம். உரிமை யறிந்தோர் திறமையுடையவர். கடமை யறிந்தோர் தகுதி உடையவர், ஒழுக்கம் உடையவர். சட்டம் உணர்ந்தோர் அறிவுடையவர். சட்டம் உரிமையைக்கொண்டு கடமையை வலியுறுத்துகிறது. பொது உரிமையைக் கொண்டு தனி உரிமையைக் கட்டுப் படுத்துகிறது. அறிவு கலந்த அன்பு அல்லது அருள் பொது உரிமை அடிப்படையில் தனி உரிமையையும், தனி உரிமை அடிப்படையில் பொது உரிமையையும் வளர்த்து இரண்டையும் ஒன்றுக்குகிறது.

ஆகவே சட்டம் என்பது ஆதாரமும் நோக்கமும் அற்றதல்ல. கடமையை நில ஆதாரமாகக் கொண்டு உரிமை என்னும் வேரின் உதவியால் அது நிற்க வேண்டும். சமூகப் பொது நலம் என்னும் வானேக்கி அது வளரவேண்டும். எந்த அளவுக்கு அது முழு நிறை பொதுநலத்தை நோக்கிச் செல்லுமோ அந்த அளவுக்கு அது உயர்வுடைவது.

ஒரு கொலைக்குத் தண்டனை, மற்றொரு கொலை! மனித சமூகத்தின் இந்த நீதி கண்டு இரக்கமும் 'எளன'மும் நகைப்பும் கொண்ட அறிஞர் பலர். "சட்டம் இயற்றுபவரே அதைப் பயன்படுத்துபவர்." இங்கிலை'

முழுதும் பேணப்பட்டால் தண்டனை தேவைப்படாது. இந்நிலையை அணுகுந்தோறும் தண்டனையின் தேவை குறையும். ஏனெனில் தண்டனை என்பது சமூகம் தன் ஆதாரமான தனிமனிதன் வலுவைக் குறைக்கும் செயல் ஆகும்.

தண்டிப்பவர் தண்டலாளர், முறைமன்றத் தலைவர். ஆனால் சட்டம் அமைப்பவர் வேறு. அவர் தகுதியும் வேறு. அவர் அறிய வேண்டுவது சட்டமன்று; மனித வாழ்வின் தேவை. இதற்கு அவர் மனிதரிடையே மனிதராக வாழ்பவராயிருக்க வேண்டும். மனித உணர்ச்சிகளுடையவராயிருக்க வேண்டும். ஆனால் அதே சமயம் அவர் தனி மனிதருடன் ஒரு தனி மனிதரா யிராமல், பொது மனித அவாஆர்வங்களையும் கனவார்வங்களையும் உடையவராகவும், பொது மனிதன் நலங்களை அவாவுபவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் அவர் மனித உணர்ச்சி உடையவராயினும் அதற்கு அடிமைப்படாதவராயிருக்க வேண்டும். அவர் தன்னலம் அறிய வேண்டும். ஆனால் பொது நலம் உடையவராயிருக்க வேண்டும். பொது நலத்தின் பகைவரான தீயவர்களைத் திருத்தும் திறமுடையவராயிருக்க வேண்டும். ஆனால் அவர் தீயவராயிருக்கக் கூடாது.

சுருங்கச் சொன்னால், அவர் சட்ட அறிஞராயிருந்தால் போதாது. சமூக வறிஞராய், அன்பறிஞராய் இருத்தல் வேண்டும். அரசியல் அறிஞராய் இருந்தால் போதாது, மனித இனப்பற்றுளராய், மனித இன அறிஞராய் இருத்தல் வேண்டும்.

சட்டம் வகுப்பவரின் அருமையை மனித சமூகம் தொன்று தொட்டு நன்குணர்ந்துள்ளது என்னலாம். ஆதென்ஸுக்கு லிகர்கஸ் சட்டம் வகுக்க எண்ணியதால் அவர் அரசுரிமையைத் துறந்தாராம். சட்டம் வகுப்பவர் நிலை அரசர் நிலையினும் மேம்பட்டதாகக் கருதப்பட்டது என்பதை இது காட்டுகிறது. அத்துடன் சட்டம் வகுப்பவர் அச் சட்டத்தைப் பயன்படுத்தும் பதவி அல்லது நிலை உடையவராயிருக்கக் கூடாது என்பதையும் மக்கள்

உணர்ந்திருந்தனர். ஏனெனில் இத்தாலியும் ஜெனிவாவும் அடிக்கடி அயல் இனத்தவரையே சட்டம் வகுக்க அழைத்தன. சட்டமும் சட்டத்தை இயக்கும் பகுதியும் ஒன்ருயிருந்தனுலேயே, உரோமப்பேராசில் கொடுங்கோன்மை மிகுதியாயிருந்தது.

சட்டம் வகுப்பவரே சட்டத்தை இயக்குபவராகவும் இருக்கக் கூடாது என்பது குடியாட்சியின் அடிப்படைத தத்துவம். சட்டத்தைப் பயன்படுத்துபவருள்ளும் பொது நலங்கடந்த தன்னலமோ, குழூநலமோ இருக்கக் கூடாது என்பதும் வெளிப்படை. சட்ட மன்றத்தில் எல்லாச் சமூகநலன், இடநலன், வகுப்பு நலன்களின் பேராட்கள் இடம் பெறுவது இதனுலேயே.

இறுதியாகக் கவனிக்கத்தக்க ஒரு பண்பு உண்டு. சட்டம் வகுப்பவர் மக்கள் விருப்பத்துக்கு உரியவராயிருத்தல் வேண்டும். அதே சமயம் அது வெறும் விருப்பமா யிருக்கக்கூடாது. சட்டம் வகுப்பவர் பொது மக்கள் நிலை கடந்த பொதுநல அறிவு உடையவர்கள் ஆயிருக்க வேண்டும். இத்தகைய புகழ்மதிப்பும் அவர்கள் விருப்ப மதிப்பில் இடம் பெறத்தகும்.

ஆனல் சமூக வளர்ச்சி, சட்டம், சட்டம் வகுப்பவர் ஆகிய முத்திறங்களின் தன்மையும் சமூக மக்களின் பொது விருப் பெல்லையை, பொது அறிவு, பொதுப் பண்பு எல்லையைப் பொறுத்தது. இவற்றுள் சமூகவளர்ச்சி முதலிய பண்புகள் கவணில் எறியப்படக் காத்திருக்கும் கற்கள். பொது விருப்ப முதலிய பண்புகளே எறியும் கையின் தசைவலுவும் திறமுமாயமையும். ஆகவே மக்கள் பண்பே சமூக ஆட்சியின் அடிப்படை ஆகும். பேரறிஞர் பிளேட்டோ ஒரு தடவை ஆர்க்கேடியராலும் கைரீணியராலும் சட்டம் வகுக்க அழைக்கப்பட்டார். செல்வமிக்க அந்நாடுகளில் மக்களிடையே உயர்வு தாழ்வு மிகுதியாயிருந்ததால், எந்தச் சட்டமும் அவர்களுக்குப் பயன்படாது என்று கூறி அவர் மறுத்து விட்டார் என்று அறிகிறோம். கிரீட்டில் மினுஸ் என்பவர் எல்லாராலும் மெச்சத் தக்க நல்ல சட்டங்கள் வகுத்தார். ஆனல்

தியொழுக்க மிக்க அந் நாட்டவரிடையே அச்சட்டங்கள் பயனற்றவையாயின.

ஒரு நாடு தன் பொது நலத்துக்கு ஏற்ற சட்டங்கள் பெற, அது தன் பண்பாட் டிளமைக் காலம் வரை காத்ருக்க வேண்டும். குழந்தைப் பருவ நாடுகள் சட்டத்தை மதிக்கமாட்டா. முதுமைப் பருவ நாடுகள் சட்டத்தை இரும்புச் சங்கிலியாக்கி அவற்றின் பயனை மறக்கும். குழந்தைப் பருவத்தின் முழுநெகிழ்ச்சியும் முதுமையின் முழு விறைப்பும் இல்லாமல் நடு நிலையான நெகிழ்வும் வலிவும் உடைய இளமைப் பருவமே சட்டத்தின் உறுதிக்கும் நோக்க அடிப்படை சார்ந்த நெகிழ்ச்சிக்கும் உரிய பருவம்.

மனிதனைவிடப் பாரிய விலங்குகளும் உண்டு. மனிதனை விட மிகச் சிறிய உயரினங்களும் உண்டு. இரு கோடிகளையும் விட மனிதன் மேம்பட்டவன். இது ஏதனால்? அவன் உடல் வலுவற்றவனும் அல்ல. உடல் வலுவையே நம்பியிருப்பவனும் அல்ல. இந்நிலையே அறிவை வளர்க்கும் நடுநிலை அல்லது செவ்வுநிலை. சமூக நிலையிலும் சட்டங்களிலும் இதேபோன்ற செவ்வு நிலை தலைசிறந்த பண்புடையது. கூடிய அளவு மிகுதியான தனி மனிதன் சுதந்தரம், அதனடிப்படையில் கூடிய அளவு மிகுதியான கட்டுப்பாடு—இதுவே சமூகத்தின் செவ்வி. கூடிய மட்டும் குறைந்த தண்டனை. கூடிய மட்டும் கூடுதலான பொதுநலப் பரப்பு—இதுவே சட்டத்தின் செவ்வி. தன் உரிமை, தற்பண்பு விடாது, பொது உரிமை, கடமை பேணுதல்—இதுவே தனி மனிதன் உயர் சமூகப் பண்பின் செந்நிலை.

சமூகம் விரியுந்தோறும் தனி மனிதன் பெறும் சமூக நலன் உயர்கிறது. ஆனால் சமூகம் விரியுந்தோறும் தனி மனிதனுக்கும் அதற்கும் உள்ள தொலை பெருகுகிறது. இதனால் தனி மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடைப்பட்ட உயர்வு தாழ்வுக்குழுக்கள், வேறுபாட்டுக்குழுக்கள் ஏற்பட வழியுண்டு. ஆகவே தனி மனிதன் வலுவுக்கேற்ற

விரிவும் அவன் பற்றுர்வத்துக்கேற்ற குறுக்கமும் சமூக விரிவெல்லேயின் செவ்வி ஆகும்.

மொத்தத்தில் ஒற்றுமைகெட்ட பரந்த எல்லையைவிட ஒன்றுபட்ட சிறு இன எல்லேயே விரும்பத்தக்கது. பேரரசுகள், வல்லரசுகள் வீழ்ச்சிக்கு அவை அவாவிய பேரெல்லேயே காரணம். உண்மையான பேரெல்லே விரும்புபவர் சமூக அளவைப் பெருக்குவது தவறு. தனி மனிதர் கூட்டுறவால் அமையும் சமூகம்போல, சமூகங்களின் கூட்டுறவால் அமையும் கூட்டுச் சமூகத்தையே அவர்கள் விழைதல் வேண்டும்.

சரிசமத்துவமில்லாத சமூகங்கள் தம் உட்கோளாற்றை மறைக்க மற்ற சமூகங்கள் மீது தாக்குதல் செய்கின்றன. இது பேரரசரின் ஆட்சி ஆதிக்க வடிவில் அமையலாம். அல்லது வல்லரசின் அரசியல் ஆதிக்கமாயிருக்கலாம். அல்லது பொருளாதார ஆதிக்கமாயிருக்கலாம். ஆனால் சமூக நலனை எதிர்த்த தனி மனிதன் நலன் நீடித்து இருகக முடியாது. அதுபோலவே சமூகத்தின் நலனை எதிர்த்த குழுநலனே, ஒரு சமூகத்தின் நலனெதிர்த்த மற்றொரு சமூக நலனே நீடித்திருக்க முடியாது.

சமூகத்தை அதன் நிலப் பரப்பினுல் அளப்பதைவிட வளத்தால் அளப்பதைவிட, மக்கள் தொகையால் அளப்பதைவிட, நல்லதோர் அளவை உண்டு. மொத்த வளத்தை மக்கள் தொகையால் வகுத்துவரும் வீதமே சமூகத்தின் பண்பாட்டு அளவைக் குறிப்பிடும் நல் அளவையாகும். எனவே ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகைக்கு அதன்மூலம் சமூகம் உண்டுபண்ணும் வளத்தின் அளவு எவ்வளவு மிகுதியோ, அந்த அளவுக்கு அது உயர்ந்த சமூகம் என்னலாம். நாகரீகத்தின் உயர்வும் வளர்ச்சிக் குறியீடும் இதுவே.

பாதுகாப்புப் போர் சமூக வாழ்வுக்கு ஒரு இன்றியமையாக் சூழ்நிலேயாகக் கருதப்படலாம். ஆனல் போர் எப்படியும் ஒரு நாட்டின் வளத்துக்கு அறிகுறியல்ல.

வளர்ச்சிக்கும் வழியல்ல. நல்ல சமூகம் தன் சூழலைக்கூட மாற்றியமைத்துத் தற்காப்புப் போருக்குக்கூட அவசிய மில்லாமல் செய்துவிட முடியும்.

நல்ல சமூகத்தில் சமூகம் வேறல்ல, அரசாங்கம் வேறல்ல, ஆனால் இவ் வுயர் குறிக்கோள்நிலை இல்லாத இடத்திலும், சமூகத்தை வளர்க்கும் அரசாங்கமே நல்ல அரசாங்கம். போர் சமூகத்தை வளர்ப்பதன்று. ஆகவே போரை உண்டுபண்ணும் அரசாங்கமும், போரிடையே வலுப்பட்டு வளரும் அரசாங்கமும், சமூகத்தை அழிக்கும் அரசாங்கங்கள் ஆகும்.

ஒரு அரசாங்கத்தின் ஆட்சிக்குரிய சமூகமே ஒரு நாடு. நாடு அல்லது அரசியல் சமூகம் பொதுவாக ஒரு சமூகமாகவே இருக்கலாம். அதைவிட விரிவாகவும் இருக்கலாம். முந்திய நிலை மிகக் குறுகிய மனப்பான்மையை வளர்க்கும். அதன் சட்டங்கள் இக்குறுகிய மனப்பான்மையைக் காட்டும். பிந்திய நிலை ஒற்றுமையைக் கெடுக்கும். ஆதிக்கக் குழுவை உண்டுபண்ணும். நடுநிலைச் செவ்வி, ஒரு சமூகத்துடன் அதன் மொழி, பண்பு, வரலாற்று மரபு, வாழ்க்கைநலன்கள் ஆகியவற்றில் ஒத்த பிற சமூகங்கள் ஒன்றுபடுவதன் மூலமே அமையும். இதில் ஒரே குறுகிய சமூகத்துக்குரிய மூட நம்பிக்கைகள், குருட்டுப் பழக்க வழக்கங்கள் தளரும். அதே சமயம் ஒன்றுபட்ட வளர்ச்சிக்கு வழி ஏற்படும். சட்டங்கள் முன்னவற்றின் அடிப்படையாக எழுந்து, பிந்திய நிலை நோக்கி வளரும்.

சட்டங்களின் உள்ளுறை பொது நலமே. ஆனால் பொதுநலம் என்றால் என்ன? இரண்டு சொற்களில் அதைத் தொகுத்துக் கூறலாம். சுதந்திர உரிமை! சமத்துவம்! இவையே அச்சொற்கள்.

சுதந்தர உரிமை என்பது பொது உரிமைக்கு உட்பட்ட மிகக் கூடுதலளவான தனிமனித உரிமை ஆகும். சமத்துவம் என்பது ஒரே மட்ட நிலை, அல்லது மட்ட நிலை பேணுதல் என்பதன்று. சட்டங்கள், அரசியலமைப்பு

முறை ஆகியவை எல்லாருக்கும் சரி சம வளர்ச்சிக்கான சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். அத்துடன் கடமையும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சரிசமமாயிருக்கவேண்டும். மிகுதி கடமையாற்றுபவனுக்கு மிகுதி உரிமை இருக்க வேண்டும். கடமையாற்றுபவன் உரிமையைச் சட்டம் கடமையாற்றாதவனுக்குக் கொடுப்பது அநீதி. ஏனென்றால் அது அவன் கடமையார்வத்தைக் குலைத்துச் சமூகத்தை நலிய வைக்கும்.

சட்டங்கள் நாட்டின் வாழ்வுக்கு வழி காட்டும். நாட்டின் தனிப் பண்புகள் வளர்வது இதனாலேயே. இத் தனிப் பண்புகள் நாட்டின் நிலைக்கு ஏற்றதாயிருக்கவேண்டும். ஸ்பார்ட்டா நகர மக்கள் பகைவரிடையே வாழ்ந்தனர். போரில் மிக ஆபத்தானது பாதுகாப்புப் போர். ஏனென்றால் அது எப்போதும் போருக்கு ஆயத்தமாயிருக்கும் நிலைமையைக் கோருகிறது. இதனால் ஸ்பார்ட்டா நகர மக்கள் உடல்வலு வளர்த்தனர். உரோம நாடு உழையாதவர் ஆதிக்கமுடைய நாடு. ஆதிக்கப் போராலேயே அது வாழ முடியும். ஆகவே அது மக்கள் வலுவைப் பெருக்காமல், படை வலிமையைப் பெருக்கிற்று. நில வளமில்லா அதேனியர் கலை வளர்த்தனர். கடற்கரையோரம் வாழ்ந்த கார்த்தெஜினியர், டயர் நகர மக்கள் ஆகியவர்கள் கடல் வாணிகம் வளர்த்தனர். ஒற்றுமைக்கு வகையற்ற சிதறிய வாழ்வுடைய அராபியர், எபிரேயர் சமயம் வளர்த்தனர். இவ்வெல்லா மக்கட் குழுவின் சட்டங்களும் அவரவர் பண்பாட்டு வளர்ச்சியிலேயே நின்றன.

சட்டங்களின் வகைகள் பல. அவை எந்த எந்தச் சமூகக் கூறுகளை இணைக்கின்றன என்பதைப் பொறுத்தது அவற்றின் வகை பேதங்கள். ஆள்பவர் தொகுதியும் ஆளப்படுபவர் தொகுதியும் உண்மையில் ஒன்றே. ஆயினும் இரு நிலைப் பண்புகளும் வேறு. ஆட்சிக் கூறு மக்கட் கூறு ஆகிய இரண்டின் உரிமை கடமைத் தொடர்புகளை வகுக்கும் சட்டங்கள் அடிப்படைச் சட்டங்கள் அல்லது அரசியலமைப்புச் சட்டங்கள் ஆகும். இவை

அரசியல் ஏற்படுவதற்கு முற்பட்ட சமூக அமைப்பு முறை சார்ந்த வழக்கம் அல்லது எழுதாச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆள்பவர், ஆளப்படுவர் ஒருமைமையை உணர்ந்து செய்யப்படுந்தோறும் இவ்வடிப் படைச் சட்டங்கள் சமூகம் வளர்க்கும். அதை உணராத அளவுக்கு அவை அழிவுச் சட்டங்களா யமையும்.

இரண்டாவது வகைச் சட்டம் சமூக உறுப்பினர் ஒருவருடன் ஒருவரும், உறுப்பினர் பொது சமூகத்துடனும் கொள்ளும் தொடர்பு பற்றியது. இது உறுப்பினர் சமத்துவம் போலும் அளவிலேயே சமூகத்தை ஒன்று படுத்தி வலுவூட்டும்.

மூன்ருவது சட்டவகை சட்டத்துக்கும் தனி மனிதனுக்கும் இடையேயுள்ள தொடர்பை வரையறுப்பது. பொது வாழ்வாகிய பயிரைத் தனி மனிதன் உரிமையாகிய உரமும் வேலியாகிய சட்டங்களும் பேணி வளர்க்கின்றன. உரம் மிகுதியாகிச் சமூகத்தின் பொதுநலனழிக்கும் களையாகாமல் குற்றச் சட்டங்கள் பாதுகாக்கின்றன. சட்டமாகிய வேலி மிகுதி வளர்ந்து பயிரை மூழ்கடிக்காமல் தனிமனிதன் உரிமைப் பாதுகாப்புச் சட்டங்கள் பார்க்கின்றன.

இம்மூன்றன்றி நான்காவது சட்டவகையும் ஒன்று உண்டு. அதுவே முக்கியமான அடிப்படையான வகை. ஆயினும் அதுவே சட்டம் வகுப்பவர் பெரிதும் கவனியாதது. அது மக்கள் மரபுகள், நடையுடை பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கருத்துக்கள் ஆகியவற்றை இயக்குபவை. அதில் கருத்துச் செலுத்துபவரே உண்மையான நாட்டுப்பற்ருளர், உண்மையான மக்கட் பெற்ருளர். அவர்களே சமூகச் சீர்த்திருத்தவாதிகள் என்று அழைக்கப்படுவர்.

## 3. அரசாங்கங்கள்

அரசாங்கம் என்பது என்ன ?

இது பற்றி மக்களிடையே—அறிஞரிடையே கூட—பெருங் குழப்பம் நிலவுகிறது.

அரசியல் சமூகத்தின் முழுமுதல் பிரதிநிதியே அரசாங்கம் என்று பலர் கருதுகின்றனர்.

அரசாங்கம் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது இக்கருத்துக்கு ஆதாரமாயிருக்கிறது.

ஆனால் அரசாங்கம் அல்லது அரசர் கடவுளருளால் உரிமை பெறுகின்றனர் என்ற கருத்தும் நிலவுகிறது; இதைக் குடியாக்கியாளர் எதிர்க்கின்றனர்.

உண்மை இரண்டு கருத்திலும் உண்டு என்றும் இரண்டு கருத்திலும் இல்லை என்றும் கூறலாம். அதாவது இரண்டு கருத்திலும் உண்மையின் ஒரோரு பகுதி உண்டு.

எல்லாரும் எல்லாரையும் ஆள்வதே நல் அரசாங்கம்.

ஆனால் இது எப்படி முடியும் ?

ஒவ்வொரு தனிமனிதன் செயலுக்கும் ஒவ்வொரு சமூகத்தின் செயலுக்கும் இரண்டு சக்திகள் வேண்டும். ஒன்று செயல் விருப்பம். இன்னொன்று செயல் துணிவு. சமூகத்தின் செயல் விருப்பம் அதன் சட்ட வகுப்புத் தொழில் (Ligislative Power). அதன் செயல் துணிவு, அதன் நடை முறையாட்சி (Executive Power)

எல்லாரும் ஆள்வது சட்ட வகுப்புத் துறையில்.

எல்லாரும் ஆளப்படுவது நடைமுறையாட்சித் துறையில்.

முன்னது மக்கள் விருப்பத்துக்கு உட்பட்டது. இது குடியாட்சியாளர் வற்புறுத்தும் துறை.

பின்னது மக்கள் விருப்பத்துக்கோ, உணர்ச்சிக்கோ உட்பட்டதன்று. அவர்கள் அறிவுக்கும் நேர்மையுணர்ச்சிக்கும் மட்டுமே உரியது. சட்ட மூலமாக அவர்களால் இயக்குவதற்குறியது. நேரடியாகத் தீண்டத் தகாதது. ஆட்சியின் தெய்விக உரிமையை நம்பும் முடியாட்சியாளர் வற்புறுத்தும் துறை இது.

முன்னது சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையிலெழுந்த முழுமுதலுரிமை.

பின்னது அதைச் சாராத தற்காலிகப் பண்பு.

ஆனல் முன்னது மக்கள் பிரதிநிதித்துவம் கோருவது, நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் வேறுபடுவது. பின்னது திறமை கோருவது. நடுநிலை நாடுவது. நாடு இனம் கடந்தது.

அரசாங்கங்கள் அமைவது இப்பண்புகளின் அடிப்படையிலேயே என்று காணலாம். வலிமையும் திறமையு முடையவரே நடைமுறையாட்சியைக் கைப்பற்ற முடியும். மக்கள் விருப்பத்துக்குரியவரே அவ்வாட்சியை இயக்க, நீடித்து நிலவவைக்க முடியும்.

அரசாங்க மாறுதல்கள் எல்லாம் அரசியல்சமூக மாறுபாடல்ல. புதிய அரசாங்கம் பழய அரசாங்கத்தின் சட்டங்களை அப்படியே ஏற்கத் தடையிராது. ஆனல் அரசியல்சமூக மாறுபாடு ஒரு புரட்சி யில்லாமல் நடைபெருது. அரசாங்கத்துக்கும் அரசியல்சமூகத்துக்கும் அதாவது சட்டத்தை நிறைவேற்றுபவருக்கும் சட்டம் வகுக்கும் உரிலமயுடையவர்க்கும் இடையே வேற்றுமை ஏற்பட்டால், அப்போதும் உள் நாட்டுக் குழப்பம் அல்லது புரட்சி ஏற்படும்.

அரசாங்கத்தின் வலு எப்போதும் ஆள்பவர் வலுவைப் பொறுத்தன்று. ஆளப்படும் குழுவின் விருப்பம், அவர்கள் கருத்துக்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றுக் இணங்கிய அரசாங்கத்தில், ஆள்பவர், வலுக்குறைவாயிருந்தாலும் அரசாங்கம் வலுவுடையதாயிருக்கும். அஃது,

அல்லாத இடத்தில், ஆட்சியாளர் வலிமை மிகுதி தேவைப்படும். ஆகவே அரசாங்கத்தின் வலிமை ஆட்சியாளர் வலிமையை மட்டும பொறுத்தல்ல; மக்கள் விருப்பத்துக்கு அவர்கள் இணங்கும் அளவு, ஆட்சியாளர் வலு ஆகியவற்றின் தொடர்பு வீதத்தையே அது பொறுத்தது.

இன்னொரு வகையாகக் கூறினல் முழு முதல் உரிமை உடைய சட்ட வகுப்புக்குழு விரிவுபட்டிருக்கும் தோறும், அதாவது அது மக்கள் விருப்பத்தைத் தழுவுந், தோறும், ஆட்சி வலுவுடையது. அதே சமயம் நடைமுறை யாட்சித்துறை குறுகுந்தோறும், அதாவது அது மககள் விருப்பத்தைத் தழுவாது விலகுந்தோறும், ஆட்சி வலுவற்றது.

நடைமுறை ஆட்சியில் எப்போதும் பிரதிநிதித்துவம தொகை இரண்டையும் விட, திறமையே மிகுதி கருதத் தக்கது. எனவே இதன் அடிப்படையில் வலுவான ஆட்சிமுறைக்கும் நல்லாட்சிமுறைக்கும் வேறுபாடு இல்லை. ஆயினும் அரசாங்க முறையில் நடைமுறை ஆட்சியாளரும் சட்ட வகுப்பாளரும் ஒரே அரசாங்கமே யாகின்றது. எனவே தான், ஆட்சி முறை வேறுபாடுகள் யாவும் சட்ட வகுப்புத் துறை, நடைமுறை ஆகிய இரண்டும் சார்ந்தவையாகின்றன.

எல்லா மக்களும் அல்லது எல்லா மக்களின் பிரதிநிதிகளும் ஆட்சி செய்யும் ஆட்சியே குடியாட்சி (Democracy) ஆட்சி செய்பவர் சிலராளுல் (gist) அது சிலகுடியாட்சி அல்லது உயர் குடியாட்சி ஆகும். அது ஒரு மனிதனுல் அது முடியாட்சி ஆகும்.

இப் பெருங் கூறுகளுள் சிறு பிரிவுகள் உண்டு. அவை ஒருவகையிலிருந்து அடுத்த வகை நோக்கிச் செல்லும்படிகளாக உள்ளன.

சட்டத்தை ஆக்குபவர்களே அதனைக் கையாளவும் அதன் பொருள் விளக்கவும் சிறந்தவர்கள். இது உண்மையானல், சட்ட வகுப்பு, சட்டத் தீர்ப்பு, நடைமுறை ஆட்சி

163079
கமா
3/5/68
W
NSI

மூன்றும் ஒன்றாயிருக்கலாம். குடியாட்சியில் இம்மூன்றும் தொடர்பு படுத்தப்படுகின்றன.

உண்மையான குடியாட்சி அரிது. ஏனென்றால் எல்லாரும் அரசியலில் அக்கறைகொள்ளும் அளவு அது சிறிதாயிருக்கவேண்டும். இரண்டாவது அதில் மக்களிடையே உண்மையான பழக்கவழக்கக் கருத்தொற்றுமை இருக்க வேண்டும். அதனுள் சரி நிகர்நிலை இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு, ஆதிக்க அடிமைத்தொடர்பு ஆகியவை சரிசம நிலையை அழித்துவிடும். தவிர, போர் முதலிய நெருக்கடி நிலையில் குடியாட்சி செயல் திறம் உடையதாயிராது.

பல நாடுகளில் தொல்பழங்காலக் குடியாட்சிக் காலங்களில் குடும்பத்தில் மூத்தவர் ஆண்டனர். இளையோர் அவ்வாட்சியிலடங்கி அவர்களை வாளாது பின்பற்றினர். நாளடைவில் மூத்தோர் வழிவந்த சில குடிகள் உயர்வு பெற்று உயர் வகுப்பாயின. உயர் வகுப்பாட்சி ஏற்பட்டது.

திறமையுடைய தனி மனிதன் ஆட்சியைக் கைப பற்றி, அவன் வழியில் ஒரு மனிதன் ஆட்சி ஏற்பட்ட போது, அது முடியரசாயிற்று.

குடியாட்சியிலுள்ள குறைகளைவிட உயர் குடியாட்சியிலும் முடியாட்சியிலும் ஓர் அடிப்படைக் குறைபாடு உண்டு. திறமை பிறப்படிப் படையாக என்றும் அமைவதில்லை. உயர்குடி திறமையற்ற இறுமாப்புக் குடியாவது இயல்பு. திறமையற்ற முடியரசன். திறமையில் பயிற்சி கூடப் பெற முடியாத முழு மூடனாக இருக்கும் நிலை ஏற்படுவதுண்டு.

ஆனால் வரலாற்றின் போக்கில் எல்லா ஆட்சி முறையிலும் எல்லா அரசாங்க முறையின் கூறுகளும் உண்டு. அத்துடன் குடியாட்சிக் கால அடிப்படைச் சட்டம் உயர் குடியாட்சி, முடியாட்சிக் காவல்களிலும் தொடர்ந்துள்ளது.

குடியாட்சி, உயர் குடியாட்சி, முடியாட்சி, இவை மூன்று கூறும் கலந்த ஆட்சி ஆகிய நான்கு வகை ஆட்சிகளிலும் மிக நல்ல ஆட்சி முறை எது?

மக்கள் பண்புக்கேற்றதும் கூடியமட்டும் சிக்கலில்லாது எளிதில் செயலாற்றத்தக்க ஆட்சி முறைதான் நல்லாட்சி முறை ஆகும். ஆகவே நல்லாட்சி என்பது ஆட்சி முறையை மட்டும் பொறுத்ததன்று. அந்தந்த மக்கள் பண்புக்கியைய அவரவர்கள் வாழ்வை வளப்படுத்தத் தக்க ஆட்சியே நல்லாட்சி என்னலாம்.

ஆனால் பொதுவாக நடைமுறையாட்சித் துறையும் (Executive) சட்ட நடைமுறையாட்சித் துறையும். (Judiciary) இரண்டும் சட்ட வகுப்புத் துறைக்கு (Legjslature) உட்பட்டிருக்கும் ஆட்சி முறையே நல்லாட்சி என்று கூறலாம்.

குடியாட்சியிலிருந்து உயர் குடியாட்சி, உயர் குடியாட்சியிலிருந்து முடியாட்சி என்ற போக்கில் ஆட்சி முறை செல்லுமானல், அது அது ஆட்சி முறையின் அழிவு என்று கூறலாம். ஆனல் இதைவிட மோசமான அழிவு ஒன்று உண்டு. சட்டங்கள், திட்டங்கள் கைவிடப்பட்டு. ஆட்சியாளர் தன்னலக் குழுவாய் விடக்கூடும். இங்கே ஆள்பவர் ஆளப்படும் நாட்டவரானலும், வெளி நாட்டவர் போலாகி விடுகின்றனர். மக்கள் நலன் வேறு. ஆள்பவர் நலன் வேறு ஆகிவிடுகிறது. பொது உரிமை நாளடைவில் ஒரு சிலர் தனி உரிமையாகிப் பின் ஒரு குழு உரிமை ஆகி விடுவது உண்மையில் வெளி நாட்டாட்சியை விட மோசமானது. ஏனெனில் வெளி நாட்டாட்சியில் எல்லாரும் அடிமைப்படுவர், ஒரே வகை அடிமைத்தனத்தில் சமததுவம் பண்பு உண்டு. இது நாளடைவில் அடிமைத் தனத்தை ஒழிக்கும் பண்பு ஆகிவிடும். ஆனல் தனி நலன்கள் சரிசம நிலையைக் குலைக்கும். தனி நலன் குழு நலனகைப் பெருகினல்கூடத் தீமை குறையாது, கூடவே செய்யும். சரிசம நிலையில்லாதபோது பெரும்பான்மை ஆட்சிக்கூடத் தாங்க முடியாத கொடுங்கோன்மை ஆகிவிடும்.

அரசாங்கத்தின் அழிவு அரசியல் சமூகத்தின் அழிவல்ல. அரசாங்கங்கள் தம்மையே அரசியல் சமூகமாகக் கருதுவதுண்டு. இதனால் தம் பகைவரைச் சமூகப் பகைவராக அவர்கள் தண்டிப்பதும் உண்டு. ஆனால் ஒரு அரசாங்கத்தின் பகைவரே அடுத்த அரசாங்கமாக முடியும். அரசியல் சமூகப் பகைவர் என்றும் பகைவராகவே இருப்பர். அதாவது அரசாங்கத் துரோகிகள் எல்லாரும் தேசத் துரோகிகள் அல்லர். ஆனால் தேசத்துரோகிகள் எல்லாரும் அரசாங்கத்துக்கும் துரோகிகளே.

சட்டப்படி ஆளும் அரசாங்கம் அல்லது அரசனே அரசியல் சமூகம் ஏற்கும் அரசாங்கம் அல்லது அரசு. போரில் வென்ற அரசன்கூட இதற்கு விலக்கல்ல. வெற்றி கொண்ட பல அரசர் இதனை உணர்ந்து செயலாற்றியுள்ளனர். சட்டத்தை மீறுபவரே தகா அரசர் **(Usurper)**.

அரசாங்கத்தின் வாழ்வு அதன் வலுவைப் பொறுத்தது. ஆனால் அரசாங்க வீழ்ச்சிகளையும் மாறுதல்களையும் கடந்து அரசியல் சமூகம் வாழும் அரசியல் சமூக வாழ்வு சமூகப் பண்பைப் பொறுத்தது. ஆனால் அரசியல் சமூகம் மக்கள் சமூகமாக, அது கடந்த மக்களாக, கலைவுபெறக் கூடும். இது படையெடுப்பு, உட்குழப்பம், சட்டச் சீரழிவு ஆகியவற்றால் நேருவது.

உறுதியான தற்பண்பு, சூழ்நிலைகளுக்கு ஏற்ப நெகிழ்ச்சியடையும் ஒப்புரவுப்பண்பு ஆகியவற்றின் கூட்டுறவே நீடித்த சமூக, அரசியல் சமூகப் பண்பு ஆகும்.

ஆட்சியுரிமை சமூக முழுமுதலைச் சார்ந்தது. அரசியலமைப்புச் சட்டம் அம் முழு முதலின் உரிமையை அரசாங்கத்துக்கு அளிக்கிறது. அரசாங்கம் தன் திறமையால் நடைமுறையாட்சி செய்கிறது. ஆனால் வலுவான ஆட்சிக்கு அடிக்கடி முழுமுதலின் ஆதரவு தேவை. வேண்டும் போது மக்கள் பேரவை கூட்டப்பெறுகின்றன. தவிர, குறிப்பிட்ட தவணையில் மக்கள் பேரவைகள் கூடும்படி ஒழுங்குமுறைகள் ஏற்பட்டுள்ளன. ஆட்சியாளர் உண்மை

யான ஆட்சியுரிமைக் குழுவை இங்கே சந்திக்கின்றனர். அக்குழுவில் ஒவ்வொருவரும், உயர்ந்தவரும் தாழ்ந்தவரும், நடைமுறையாட்சியில் அரசாங்கத்தின் குடிகள் தான்; ஆனால் இப்போது இங்கே அவர்கள் அரசாங்கத்தின் தலைவர்கள் !

பெரிய அரசியல் சமூகத்தில் முழுமுதற் குழுவின் எல்லா உறுப்பினரும் ஆட்சியாளரைச் சந்திக்க முடியாது ஆகவே அவர்கள் ஆட்போர்கள் அல்லது பிரதிநிதிகள் அனுப்புகின்றனர். ஆட்சியாளருக்கும் மக்களுக்கும் இடையே இவர்கள் இடையீட்டாளர் ஆகின்றனர்.

இடையீட்டாளர் மக்கள் நிலையான முழுப் பிரதிநிதிகள் அல்லர். தற்காலிகக் குறைநிலைப் பிரதிநிதிகளே. காலாகாலத் தேர்தலும், வேறு வகை மக்கள் தொடர்புகளும் இதனால் குடியாட்சியில் தேவைப்படுகின்றன.

(கட்சிகள் பத்திரிகைகள், 'சுதந்திர நிலையங்கள் ஆகியவை இத்தகையவை.)

## 4. ஆட்சி முறை

அரசாங்கம் சமூக ஒப்பந்தத்தில் தொடர்புடைய ஒரு உறுப்பு அல்ல. அவ்வொப்பந்தம் சமூகம் தன்னுடனேயே ஏற்படுத்திக்ககாண்ட ஒரு உடன்படிக்கை—ஆளப்படும் மக்கள் சமூகம் என்ற முறையில் அது தன்னைத்தானே ஆளும் சமூகம் ஆக்கிக்கொண்டு அம்முறைபில் அந்த ஆளும் சமூகம் அல்லது அரசியல் சமூகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் அது.

அரசியல் சமூகத்தின் சார்பில் ஆட்சியை மேற்கொண்ட திறமையுடைய குழு அல்லது திறமையுடையவர் வகுத்த குழுவே அரசாங்கம்.

ஆனால் ஆட்சி முறை அரசாங்கத்துக்கு முற்பட்டே தொடங்கி விட்டது. இன்றும் சட்ட வகுப்புத் துறை

இதைக் காட்டுகிறது. புதிய அரசாங்கம் அமைக்கும் சட்ட வகுப்புத் துறையை நாம் இன்றும் மரபுமன்றம் (Convention) என்று கூறுகிறோம்.

ஆளப்படும் குழு அப்படியே ஆட்சிக் குழுவாய் இருக்க முடியுமா?

பிரிட்டிஷ் அரசியல் மன்றம் நடைமுறைக் காரியங்களைத்தானே ஆற்ற நேரிடும்போது தன்னைத்தானே நிறை குழு (Grand Comittee) ஆக்கிக் கொள்கிறது. நிறை குழுவாக இருந்து அது வகுத்த திட்டத்தை, அரசியல் மன்றமாக இருந்து அதுவே ஆராய்கிறது!

இன்றும் அரசாங்கம் ஆட்சியுரிமைக் குழுவாகிய அரசியல் சமூகத்தின் பிடியை விட்டுத் தப்பியோடுவதுண்டு. அதுவே சட்டமில்லாத, மன்றமில்லாத தான் தோன்றி ஆட்சி.

ஆட்சி செய்யும் அரசாங்கத்தை ஒழிக்கவும் ஆட்சி முறையையே மாற்றவும் ஆட்சியுரிமைக் குழு முற்படுவதுண்டு. இதனாலேயே கிளர்ச்சியும் புரட்சியும் ஏற்படுகின்றன.

ஆனால் ஆட்சியுரிமைக் குழுவின் உரிமை, அதாவது சமூகப் பொது உரிமை. சமூகம் அழிந்தாலன்றி அது அழியாது.

தேர்தல்கள் வாக்குரிமையாலும் சீட்டெடுப்பாலும் நடக்கலாம். திறமை தேருமிடத்தில் வாக்குரிமை நல்லதன்று. ஆனால் எல்லாரும் ஆட்சியுரிமை பெறச் சீட்டுரிமை நல்லமுறை ஆகலாம். பல இடங்களில் இரண்டும் நடைபெறுகின்றன.

தேர்தல் முறைகள், மன்றத்தில் உறுப்பினர் மொழியுரிமை முறைகள், மன்றங்களின் வகைகள், நடைமுறைகள் ஆகியவை பலவகையாக நிலவுவதுண்டு. உரோம

நாட்டில் தேர்தல் தொகுதிகள் அடிக்கடி மாற்றியமைக்கப் பட்டன. அவ்வக்காலச் சூழ்நிலையையும் ஆட்சியாளர் தன்னலத்தையும் இவை ஒருங்கே அடிப்படையாகக் கொண்டன. ஆனால் உரோமரின் தன்னலம் அறிவும் பெருமிதப்பண்பும் உடையது. அவர்கள் உலகை ஆண்டனர். தம் நாட்டையும் ஒரு உலகாகக் கருதி மக்கள் உணர்ச்சிகளின் போக்குக்கெல்லாம் விட்டுக் கொடுத்து, அதே சமயம் அவர்களை ஆட்சியில் ஈடு படுத்தி, அமைப்பு முறை மூலமே அவர்கள் சக்தியைத் தம் விருப்பப்படி இயக்கினர்.

## 5. அரசியலும் சமயமும்

மனிதர் தம்முள் ஒரு மனிதரைத் தலைவராக ஏற்கு முன், கண்காணாத் தெய்வங்களையே தலைவராகக்கொண்டு பின்பற்றினர். மன்னர் அல்லது குலபதிகளினிடத்தில் குலதெய்வங்களும் அரசியலினிடத்தில் வழிபாட்டு வினை முறைகளும் இருந்தன. ஒவ்வொரு அரசியல் சமூகத்துக் கும் ஒரு தெய்வம் இருந்தது. மக்கள் போரிட்டபோது, அவர்கள் சார்பில் தெய்வங்களும் போரிட்டன. ஆனால் வெற்றி தோல்விகளுக்குப் பின் சிலசமயம் ஒரு தெய்வம் அழிந்தது; சிலசமயம் ஒரு தெய்வம் தலைமை நிலைக்கு உயர்ந்து அடுத்த தெய்வம் அதற்கு அடிமை ஆயிற்று. சில சமயம் இரு தெய்வங்களும் ஒரு தெய்வமாக்கப்பட்டன. ஒரு தெய்வம் ஆணாகவும் மற்றது பெண்ணாகவுமிருந்தால் அவை கணவன் மனைவியாவது கூட உண்டு. கிரேக்க ரிடையே வெளியார் தெய்வங்களைத் தம் தெய்வங்களாகக் கருதும் பண்பை மிகுதியாகக் காண்கிறோம். உரோமர் காலத்தில் தோற்றவர் தெய்வங்கள் வென்றவர்களால் மேற்கொள்ளப்பட்டு, பேரரசின் எல்லா மக்கள் தெய்வப் பட்டியல்களும் ஒன்றுபட்டன. உரோம தெய்வங்களின் பட்டியலும் உரோம அரசுபோல உலகளாவின; உரோம சமயமும் அரசியலும் இரண்டுமே பேரரசுகளாக இயங்கின.

தெய்வ வழிபாடு ஒரு அரசியல் வழிபாடாயிருந்த காலத்தை விவிலிய நூலிலே காண்கிறோம். 'அம்மன்'

நாட்டவரைப் பார்த்து 'ஜெப்தா' "உங்கள் தெய்வம் சாமாஸ். அவர் உடைமைகள் ஒழுங்கு முறைப்படி உங்கள் உரிமையே அல்லவா? அதுபோலவே அதே உரிமையால், எங்கள் உரிமையும், எங்கள் வெற்றித் தெய்வம் வென்று பெற்ற நிலங்களும் எங்களையே சாரவேண்டுமல்லவா?" என்று கூறுவது காண்க.

ஆனால் யூதர்கள் அரசிழந்த பின்பும் தங்கள் விடுதலையார்வத்தால் குலதெய்வங்களை விடாப்பிடியாகக் கொண்டிருந்தனர். இது அக்கால உலகுக்குப் புதிது. நாட்டெல்லைக்குள் ஆண்ட நாட்டுத்தெய்வம் நாடுகடந்த மக்கள் தெய்வம் அதாவது குலதெய்வமாகச் செயலாற்றிற்று. கிறிஸ்துவ சமயம் இன்னும் புதிதாக அக்கால மக்களுக்குத் தோற்றியிருக்க வேண்டும். இயேசு குறிப்பிட்ட தெய்வீக அரசு உண்மையிலேயே ஒரு வருங்கால நில அரசு என்று கருதித்தான் கிறிஸ்தவரை அக்கால உரோமப் பேரரசர் இரகசியப் புரட்சிக்காரர் என்று கருதினர்.

அரசியல் வேறு, சமயம் வேறு என்ற வேறுபாட்டைப் புகுத்திய முதல் சமயம் கிறிஸ்துவ சமயமே.

சமயமே அரசியலாயிருந்தபோது நாட்டெல்லை கடந்து நாட்டு இனம் வளர முடிந்தது. கிறிஸ்தவ சமயம் இங்கிலையை மாற்றியது. இன்றுவரை கிறிஸ்தவ நாடுகள் தத்தம் தனிப் பண்பு பேணி வேற்றுமை காத்து வருகின்றன. சமய ஒற்றுமை அரசியல் ஒற்றுமை ஆகவில்லை.

சமயம் வேறன்று, அரசியல் வேறன்று என்ற கொள்கையினிடையே எழுந்த சமயம் இஸ்லாம். ஆனால் முகம்மது நபி ஒரு நல்ல அரசியலையும் ஒரு நல்ல சமயத்தையும் திறம்பட இணைத்து ஒன்றுபடுத்திக் காட்டினர். தொடக்கக் கலிபாக்கள் கால முழுவதும் அது திறம்படச் செயலாற்றிற்று. ஆனல் அராபியர் பிறநாட்டவர் கைப்பட்டபின், சமயம் வேறு, அரசியல் வேறு என்ற பிரிவினை தலை தூக்கிற்று. 'அலீ'யின் சமயக் கலையிலும் பாரசிகத்திலும் இதைக் காண்கிறோம்.

சமயம் வேறு, அரசியல் வேறு என்ற நிலை ஏற்படும் போது, அரசியலைவிடச் சமயம் மிகுதி ஆதிக்கம் நாடுவது ஆகும். அரசியலின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட உரிமை சமயத்துக்கு இருக்குமிடங்களிலெல்லாம், சமயத் தலைவர்கள் நாட்டின் ஆட்சிக்குள் ஆட்சியமைத்து அரசியலைச் செயலற்றதாக்கி விடுகின்றனர். அரசியலாட்சிக்கு உட்பட்டிருக்கும் இடங்களில் அவர்கள் அந்த அரசியலின் ஆதிக்கத் தன்மையைப் பெருக்குகின்றனர்.

கிறிஸ்தவ சமயம் முன் இருந்த எந்தச் சமயத்தையும் தாண்டி உலகளாவிய ஆதிக்கம் நாடுவது. அது அரசியலுடன் இணைக்கப்பட்டிருந்தால், அது உலகைத் தன் வேட்டைக்காடு ஆக்கியிருக்கும்.

அரசிய லடிப்படையில் சமயங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று தனிமனிதன் சமயம். இதில் உருவமும் கோயிலும் வினைமுறையும் கட்டுப்பாடும் கிடையாது. வினிவிய நூலின் எளிய மூலக் கிரிஸ்தவ சமயம் இது. ஆனால் நடைமுறையிலுள்ள கிரிஸ்தவ சமயம் மற்ற எல்லரச் சமயங்களையும் போல சமூக சமயம் அல்லது அரசியல் சமயமே. அதற்கு உருவம், கோவில், நிலஆட்சி, வினைமுறையாவும் உண்டு. அதுமட்டுமல்ல. தன் ஆட்சிக்கு வெளியே யுள்ள மனித இனத்தவரெவரையும் அது மதிப்பதில்லை. குறுகிய பழங்கால அரசியல் பண்பால், அது தன் எல்லைக்குள்ளேயே வாழ்கிறது. பழய சமயங்களுக்கும் கிருஸ்துவ சமயத்துக்கும் இவ்வகையிலுள்ள ஒரே வேற்றுமை யூதர் சமயத்தின் மூலம் வந்த வேற்றுமையே. அதாவது நாட்டெல்லை கடந்து, சமயச் சமூக எல்லையில் அது செயலாற்றுகிறது.

மேற் கூறிய இரு வகைச் சமயங்களையும் விட மோசமான மூன்றும் வகைச் சமயம் ஒன்று உண்டு. அது தன் சமய ஆட்சி எல்லையை ஒரு சமயச் சமூகமாக்காமல் இரண்டு சமய சமூகக் குழுக்கள் ஆக்கி, இரண்டினங்களின் அடிப்படையில் இருவேறு முரண்பட்ட சட்டத் தொகுதிகள், இருவேறு முரண்பட்ட கடமை

கள், உரிமைகள் வகுக்கின்றன. திபெத்திய லாம
ளின் சமயம். ஜப்பானிய சமயம், உரோமன் கத்தோ
கிறிஸ்துவ சமயம் (இந்தியாவின் வைதிக
ஆகியவை இத்தகையவை.

சமூகச் சமயம் அரசியலுக்கு அடிக்கடி துர்
தருவது. சமயத் தலைவரைப் போலவே மன்னரு
வணக்கம் செய்தல், சட்டங்களை மீறுவதற்கு அரசி
தண்டனையை விட ஆற்றல் வாய்ந்த பாவ அச்ச எ
ரிக்கை தருதல், எதிரிகளை மனச்சான்றின் குத்தலு
இரக்க உணர்ச்சியும் இல்லாமல் எதிர்க்க உதவுத
வீரப்போராட்டத்தில் இறப்பவர்க்கு விரத்துறக்கப்
உறுதிதரல் ஆகியவை இத்தகைய உதவிகள். ஆ
மொத்தத்தில் இவ்வகைச் சமயம் சமூக வளர்ச்சிக்
அரசியல் வளர்ச்சிக்கும் குந்தகமானது. அது அறிவு
பதில் நம்பிக்கையை வளர்க்கிறது. தூய ஒழு
பற்றுக்குப் பதில் வினைமுறைகளை வற்புறுத்துகி
ஒற்றுமைக்கு மாறாக வேற்றுமையையும், சமரசத்து
மாறாகச் சகிப்பற தன்மையையும் வளர்க்கிறது. பலவே
களில் சமயம் தன் குறுகிய எல்லைக்கு வெளியில் தய
மின்றிக் குருதியாறு பெருக்குகின்றது.

இரண்டாவது வகையிலும் மூன்றாவது வகை கே
பயப்படுதென்று கூறத் தேவையில்லை. விவிலிய நூலி
சமயம் அல்லது உண்மையான கிரிஸ்தவ சமயத்தி
மேற்கூறிய கூறுகள் இருக்க முடியாது. அது தன
மனிதர் சமயம். அது தனிமனிதன் ஒழுக்கத்தை உயர்த்
அவனை நல்ல குடியுறுப்பினனாக்கும். ஆயினும் அ
வரும் நல்லோராயில்லாத விடத்தில், ஒரு கொடுங்கோல
இருக்குமிடததில், இந்தக் கிறிஸ்தவ நெறி அ
எதிர்த்துப் போராடும் பண்பாய் இயங்கமாட்டா
சமூக சமயமாகிய கிரிஸ்தவ நெறியே அவ்வகையில்
லாற்ற முடியும். ஏனெனில் அது சமய ஆட்சியாளர
சமயத் தலைவர்களின் சமயம். அரசியலுடன்
யிடும் மணப்பான்மை அதற்கு உண்டு.

சமயம் அரசியலுக்கு முற்பட்டது. ஆகவே சமய அடிப்படை முற்றிலுமில்லாத அரசைக் காண்பதரிது. மன்னர் உறுதிமொழியில் இது இன்னும் இடம்பெறுகிறது. ஆனால் சமய ஆட்சி, அரசியல் ஆட்சி வேறு பிரிக்கப்படாத பழங்கால எளிய சமயமே இது. இது ஒப்பந்தத்துக்குப் புறம்பாயும், ஒப்பந்தம் செய்யும் சமூகத்தில் ஒற்றுமை, இணக்க. ஆகியவற்றைப் பேணுவதும் அது ஒப்பந்தத்துக்கு முந்திய நாகரிகப்படியின் எச்சமிச்சமரபு. இதில் கடவுள் சமூக ஒற்றுமையின் சின்னம். மேலுலகம் என்பது வருங்காலத் தலைமுறைகளின் நல்வாழ்வு. பழி என்பது சமூகத்துக்குக் கேடுபயக்கும் செயல். மொத்தத்தில் இந்த அரசியற் சமயம் அரசியலுக்கு இன்றியமையா அடிப்படையான சமூக ஒழுக்கத்தைத் திறம்பட வகுக்கிறது.

குடியாட்சியின் அடிப்படையான இந்த சமூக ஒழுங்கு முறை அல்லது இயற்கைச் சமயத்தில், கடவுள் எல்லாருக்கும் ஒரே வகையான தொடருடைய பொதுப் பெருந்தந்தை. மக்கள் அனைவரும் ஒரேவகை உடன் பிறந்தார் போன்ற உரிமை உடையவர். தனிமனித வேறுபாடுகள் கருத்து வேறுபாடுகளிடையே ஒப்புரவு பேணப்படும் இவ்வியற்கைச் சமயம் எளிதாகவும் சிக்கல்கள் அற்றதாகவும், உரைகள், விளக்கங்கள் தேவையற்றதாகவும், பல வகைக் கருத்து வேறுபாடுகள், கட்சிகளுக்கு இடமில்லாத நிலையில் ஒற்றுமைச் சின்னமாகவும் இருக்கின்றது.

இந்த இயற்கைச் சமயத்தினடிப்படையில் சமூக ஒப்பந்தம்; அதன் அடிப்படையில் அரசியற் சமூகக் குழு; அதன் இணக்கம் பெற்றும், விருப்பம் அறிந்தும் தத்தம் இயல்பு, திறம் ஆகியவற்றுக்கேற்ப அமைந்த அரசாங்க முறைகள், என மக்கள் நாகரீக சமூகம் முன்னேறிச் செல்கிறது. ஆனால் இயற்கையோடொட்டிய அளவிலேயே அதன் முழு நிறை வெற்றி மலருமாதலால், அதன் வளர்ச்சி அடிப்படைப் பண்புகள் தழுவியும், அவற்றிற்கு மாறாக இல்லாமலும் இருத்தல் வேண்டும்.

G.T. அவலி. 4/5/66

G.T. முருகேசன் 4-5-66

W N51 163679

அடுத்தது !

?

1-9-52-ல் வருகிறது